www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

44

> தமிழ் மக்களுக்கிருந்த தேசிய இன ஒடுக்குமுறைக்கு சிங்களப் பாட்டாளிகளுடன் இணைந்த வர்க்கப் போராட்டமே தீர்வு என்று கணித்ததில் விட்ட தவறு என்பன இந்த அணியினர் நடாத்திய போராட்டங்களை வெறும் சமூக சீர்திருத்தப் போராட்டங்கள் என்ற குறுகிய வட்டத்துக்குள் முடங்கச் செய்துவிட்டன.

# தீண்டாமை ஒழிப்புப்போராட்டத்தின் தவறுகளும் - படிப்பினைகளும்

1960-க்கும், 1970-க்கும் இடைப்பட்ட காலத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடாத்திய போராட்டங்கள் யாழ்ப்பாண சாதி அமைப்பை ஒரு உலுப்பு உலுப்பியதை எவரும் மறுக்க முடியாது. இந்த உலுப்பல், சாதிய மரத்தின் பக்க வேர்கள் பலவற்றை அறுத்தெறிந்திருந்தது.

இந்தப் பத்து 'வருடகாலத்தில் தாழ்த்தப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த பல இந்து ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டதும், சைவப் பாரம்பரியம் மிக்க பல பாடசாலைகள் இந்த மக்களின் பிள்ளைகள் கல்வி கற்க அனுமதி வழங்கியதும், தோளில் துண்டை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு ஒதுங்கி நின்று வழிவிடும் வழக்கம் இல்லாதொழிக்கப்பட்டதும், பெரும் பாலான பெரிய சிறிய நகரங்களில் உணவு விடுதிகள்; தேநீர் கடைகளில்; போத்தல்களுக்கும், கறள் பிடித்த மூக்குப் பேணிக்கும், தாமரை இலைக்கும் விடை கொடுக்கப்பட்டதும், பிணம் எரித்தல், 'கா' காவுதல், உயர்சாதியினரின் திருமணத்தில் நடைபெறும் 'மாப்பிள்ளை பொம்பிள்ளை அழைப்பில்' அவர்கள் வீடுகளில் தொழில் செய்யும் குறைந்த சாதியினர் திருமணச் சாமான்கள் மற்றும் சீர்வரிசைகளை ஒரு தடியின் இரு புறமும் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு தோளில்வைத்து காவிச் செல்வதும், முற்றம் கூட்டுதல் போன்ற சேவகங்கள் இல்லாதொழிக்கப்பட்டதும், முழுக்க முழுக்க தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சாதி அமைப்புக்கு கொடுத்த அடியால் கிடைத்த மாற்றங்களேயாகும்.

இந்தக் காலகட்டத்தில் யாழ். குடாநாட்டில் மூன்று அணிகள் இருந்தன.

முதலாவது - தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ் கட்சி என்ற இரண்டு வெவ்வேறு பெயர்களில் இயங்கிய அடிப்படையில் ஒரே வர்க்கக் குணாம்சத்தைக் கொண்ட 'கனவான்கள்' அணி.

இரண்டாவது - சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்ட நா. சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் வெகுஜன அமைப்பான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும்.

மூன்றாவது- வி.பொன்னம்பலத்தை பிரதேசத்தலைவராகக் கொண்ட சோவியத் சார்பு நிலைகொண்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் நிழலில் இயங்கிய அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையும்.

முதலாவது அணிக்கு, சாதிய அடக்குமுறையும் தீண்டாமைக் கொடுமையும் ஒழிக்கப்பட வேண்டும். அதற்கான தீவிரமான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற நோக்கம் எதுவும் இருக்கவில்லை. தமிழ் மக்களின் உரிமையும், அவர்கள் இழந்து விட்ட இறைமையும், சிறீலங்கா பாராளுமன்றத்தில் யாசித்துப் பெற வேண்டியவை என்று தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்து வந்த அவர்களைப் பொறுத்தவரை, சாதி அமைப்புக்கு எதிரான, அல்லது தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதை விட, இன விடுதலைக்காக என்று சொல்லிக் கொண்டு உண்ணாவிரதம் இருப்பது, மறியல் செய்வது, சிங்கள எழுத்துக்களுக்கு தார்பூசி அழிப்பது, அதிக பலன் தரக்கூடிய ஒன்றாக அதாவது பாராளுமன்றப் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அதிக வாக்குகளைப் பெற்றுத் தரக்கூடிய செயற்பாடுகளாக இருந்தன.

> ஒருவன் தன்னுடைய சொந்த மதத்தைவிட்டு இன்னொரு மதத்துக்கு மாறுவதையோ, தன்னை மத நம்பிக்கையற்ற நாஸ்திகனாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதையோ நமது சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தது. ஆனால் சாதி விடயத்தில் அவ்வாறு இல்லை. ஒருவன் சாதி விட்டு சாதி மாற முடியாது.

இரண்டாவது அணியினரான நா.சண்முகதாசன் அணியினர், அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கு அதைத் தாங்கி நிற்கும் அமைப்பைத் தகர்க்க வேண்டும். அந்த அமைப்பைத் தகர்ப்பதற்கு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை நடைமுறையில் செய்து காட்டினார்கள். ஆனால் சாதியையும் வர்க்கத்தையும் ஒன்றிணைப்பதில் அவர்கள் விட்ட தவறு, தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்க ஒற்றுமையை; பௌத்த சிங்கள தேசியவாதத்தை கணக்கில் எடுக்காமல், வரட்டுத் தனமான தத்துவார்த்தப் பார்வையில் பார்த்ததில் விட்ட தவறு.



தமிழ் மக்களுக்கிருந்த தேசிய இன ஒடுக்குமுறைக்கு சிங்களப் பாட்டாளிகளுடன் இணைந்த வர்க்கப் போராட்டமே தீர்வு என்று கணித்ததில் விட்ட தவறு என்பன இந்த அணியினர் நடாத்திய போராட்டங்களை வெறும் சமூக சீர்த்திருத்தப் போராட்டங்கள்" என்ற குறுகிய வட்டத்துக்குள் முடங்கச் செய்துவிட்டன.

இந்த அணியைச் சேர்ந்த பலர் தங்களது அமைப்பின் தவறுகளுக்கு அதன் தலைவராக இருந்த நா.சண்முகதாசன் மேல் குற்றம் சுமத்திவிட்டு தப்பித்துக் கொண்டு விடுகின்றனர்.

நா.சண்முகதாசனின் பிடிவாதப்போக்கும், தனிநபர் வாதமும், புத்தகப் பார்வையும்தான் தங்களது கட்சிப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை நோக்கி வளர்த்தெடுக்க முடியாமல் துண்டு துண்டாக சிதறிப் போனதற்குக் காரணம் என்று கூறிவருகின்றனர்.

உண்மையில் சாதி அமைப்புக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துவைத்து யாழ். முற்றவெளி மைதானத்தில் உரையாற்றிய நா.சண்முகதாசன், 'யாழ்ப்பாணத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்துகின்ற போராட்டம் அமெரிக்க கறுப்பின மக்கள் நிற வெறி பிடித்த வெள்ளையர்களுக்கு எதிராக நடத்துகின்ற போராட்டத்துக்கு ஒப்பானது என்று பேசியிருந்தார்.

ஆனால் அவரது கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணத் தலைவர்கள் 'தாங்கள் நடத்துவது சாதிப் போராட்டமல்ல. வர்க்கப் போராட்டமே, ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு இருக்கக் கூடிய ஒடுக்கு முறைக்கு எதிராக உயர்சாதியில் இருக்கக் கூடிய அதாவது ஒடுக்குகின்றவர்கள் மத்தியில் இருக்கக் கூடிய பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களையும் இணைத்தே போராட வேண்டும்' என்று அதை கடுமையாக விமர்சித்தனர்.

உண்மையில் இது ஒரு தவறான விமர்சனமாகும், இது சாதியையும், வர்க்கத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல், சாதி அமைப்பினுடைய சர்வ வியாபகத் தன்மையை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் வைக்கப்பட்ட ஓர் விமர்சனமாகும். வர்க்கப் போராட்டம் வெற்றி பெற்றால் சாதியை ஒழித்துவிடலாம். ஆனால் வர்க்கப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு முன்பே 'சாதி' அந்தப் போராட்டத்தை ஒழித்துவிடும், அல்லது திசை திருப்பி விடும் என்பது நமக்கு உணர்த்துகின்ற பாடமாகும்.

மார்க்ஸினுடைய காலத்தில் மக்களைச் சீரழிக்கின்ற மயக்குகின்ற கருவியாக மதம் இருந்தது. அதனாலேயே மதம் என்பது 'அபின்' என்று மார்க்ஸ் கூறியிருந்தார்.

ஆனாலும் மதவெறி கொண்ட ஒருவனைக்கூட சரியான அரசியல் வழிகாட்டல் மூலம் வென்றெடுக்கக்கூடிய் சாத்தியக் கூறுகள் நிறையவே இருந்தன. குறிப்பாகச் சொன்னால் ஒருவன் தன்னுடைய சொந்த மதத்தைவிட்டு இன்னொரு மதத்துக்கு மாறுவதையோ, தன்னை மத நம்பிக்கையற்ற நாஸ்திகனாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதையோ நமது சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தது.

ஆனால் சாதி விடயத்தில் அவ்வாறு இல்லை. ஒருவன் சாதி விட்டு சாதி மாற முடியாது. 1977-80 காலகட்டம் வரை 'நான் சாதி இல்லாதவன்', 'நான் தமிழன்' 'நான் ஒரு பாட்டாளி' என்று சொல்லிக் கொண்டவர்களை விரல் விட்டுத்தான் எண்ணமுடியும். நமது சமூகத்தில் ஒருவன் தாயின் கருவில் இருக்கும் போதே நிர்ணயிக்கப்படும் சாதி, சாவிலே கூட மறைவதில்லை. சாதி குறைந்தவர்கள் பிணத்தை எடுத்துச் செல்வதற்கே பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரை சாதி என்பது, அபினை விடக் கொடிய 'பிறவுண் சுகர்' போன்றது. அதில் ஊறிப் போனவனைத் திருத்துவதற்கு எவ்வளவு பெரிய முயற்சி எடுக்கவேண்டுமோ, அது போல்தான் சாதியையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கும் மிகப் பெரிய போராட்டம் நடத்த வேண்டும். வர்க்கப் போராட்டம் என்ற பொதுப்படையான கோசத்துக்குள் அதை அடக்குவது, 'பிறவுண் சுகர்' ஆபத்தானது உன்னையே அழித்துவிடும், அதை பாவிக்காதே' என்று உபதேசம் செய்வதைப் போன்றதாகும்.

உண்மையில் எப்போதும் அடக்கு முறைக்கு உள்ளாகுபவர்தான் முதலில் போராட வேண்டும். அந்தப் போராட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் அடக்குபவர்கள் தரப்பிலுள்ள முற்போக்கு சக்திகள் அந்தப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்ந்து தங்களை இணைத்துக்கொள்ள முன்வர வேண்டும். அதுவே நடைமுறைக்குச் சாத்தியமானது.



அதை விடுத்து ஒடுக்குகின்றவர்கள் தரப்பில் இருக்கின்றவர்கள் போராடமுன்வரும் வரையில், ஒடுக்கப்படுபவர்கள் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அப்பட்டமான சந்தர்ப்பவாதமாகும். பாட்டாளி வர்க்கமாயிருந்தாலும், ஒடுக்குகின்ற தரப்பிலுள்ளவனுக்கும், ஒடுக்கப்படுகின்ற தரப்பிலுள்ளவனுக்குமுள்ள ஒடுக்கு முறையின் அளவு, அதன் பாதிப்பு தாக்கம் என்பவை வித்தியாசமானவை:

இதை கணக்கில் எடுக்காததே நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி விட்ட தவறாகும். அதனுடைய தீரமிக்க போராட்டங்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியாததற்கும் அந்த அமைப்பு சிதறுண்டு போனதற்கும் இதுவே அடிப்படையாகும்.

**- நக்கீரன்**

படிப்பகம்